# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – திருநெல்வேலி பிரிவு.
# மேலப்பாளையம் SDAT விளையாட்டரங்கத்தில் முன் ஆலோசனைக்கூட்டம்
## பத்திரிகைச்செய்தி

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திருநெல்வேலி மாவட்ட பிரிவு நடத்தும் ஆண்கள், பெண்களுக்கான மார்ச் மாத மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள் **25.03.2017 அன்று காலை 9 மணி** முதல் மேலப்பாளையம் SDAT விளையாட்டரங்கத்தில் வைத்து தடகளம், கூடைப்பந்து, கால்பந்து மற்றும் வாலிபால் ஆகிய போட்டிகள் கீழ்கண்ட விவரப்படி நடைபெறவுள்ளது. நீச்சல் போட்டிகள் மட்டும் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கத்தில் உள்ள நீச்சல் குளத்தில் வைத்து நடைபெறவுள்ளது. மேற்படி போட்டிகள் 14 வயதிற்குட்பட்டவர்கள் ஒரு பிரிவாகவும், அதற்கு மேற்பட்டவர்கள் அனைவரும் ஒரு பிரிவாகவும் கலந்து கொள்ளும் விதத்தில் இரு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்படவுள்ளது. **இப்போட்டிகள் நடத்துவது சம்பந்தமாக முன் ஆலோசனைக் கூட்டம் 22.03.2017 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு மேலப்பாளையம் SDAT விளையாட்டரங்கத்தில் வைத்து மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.** இக்கூட்டத்தில் செல்வன் மருத்துவமனை அதிபர் டாக்டர். பிரேம சந்திரன், அன்னை ஹாஜிரா கல்லூரி தாளாளர் பொறியாளர் செய்யது அஹமது, முஸ்லீம் மேல்நிலைப்பள்ளியின் தலைவர் திரு.L.K.S. மீரான் மைதீன், மேலப்பாளையம் ஸ்போர்ட்ஸ் அகாடமி பொறுப்பாளர்கள் திரு. அமானுல்லா, திரு. ஷாகுல் ஹமீது, முஸ்லீம் மேல்நிலைப்பள்ளி உடற்கல்வி ஆசிரியர் திரு. ஹமீது மஸ்தான் மற்றும் SDAT பயிற்றுநர்களான வாலிபால் பயிற்றுநர் முனைவர். வெங்கடேஷ், கால்பந்து பயிற்றுநர் திரு. அமலராஜன், தடகளப் பயிற்றுநர் திரு. சத்யகுமார், கூடைப்பந்து பயிற்றுநர் திரு. பழனி விக்னேஷ், நீச்சல் பயிற்றுநர் திரு. கர்ணன் மற்றும் பல்வேறு விளையாட்டு கழகப் பொறுப்பாளர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகள் ஆகியோர் கலந்து கொண்டு போட்டிகளை சிறப்பாக நடத்தவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

போட்டியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் **25.03.2017** அன்று காலை 8.30 மணிக்குள் மேலப்பாளையம் SDAT விளையாட்டரங்கத்தில் ஆஜராக வேண்டும். தனிநபர் போட்டிகளில் ஒருவர் ஒரு போட்டியில் மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். தடகளம் மற்றும் நீச்சல் ஆகிய தனிநபர் போட்டிகளுக்கு முதல் மூன்று இடங்களில் வெற்றிபெறும் வீரர் / வீராங்கனைகளுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். கூடைப்பந்து, கால்பந்து மற்றும் வாலிபால் குழு விளையாட்டுப்போட்டிகளில் முதல் இரு இடங்களை பெறுபவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். திருநெல்வேலி மாவட்டத்தை சார்ந்த வீரர் / வீராங்கனைகள் பெருமளவில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். இப்போட்டியில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம். கலந்து கொள்பவர்களுக் பயணப்படியோ, தினப்படியோ வழங்கப்படமாட்டாது.

**குறிப்பு. நீச்சல் போட்டிகள் மட்டும் 25.03.2017 அன்று பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கத்தில் செயல்பட்டு வரும் நீச்சல் குளத்தில் நடைபெறவுள்ளது.**

மேலும் விவரங்களுக்கு 0462–2572632 என்ற அலுவலக எண்ணில் தொடர்புக் கொள்ளவும்.

மேற்கண்ட தகவலை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் **முனைவர் க. சேவியர் ஜோதி சற்குணம்** தெரிவித்தார்கள்.

ஒம்/–
மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்
திருநெல்வேலி.